**<u>In the Court of the  District Munsif, Eraniel</u>**

**Original Suit No.  87/2023 Date:07.08.2026.**

**(PW1)-  ஸ்ரீராமலட்சுமணபெருமாள்**

<u>**2 ஆம் பிரதிவாதி** தரப்பு குறுக்கு  விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான், எனது மகளுக்காக வேண்டி நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கை என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனது மகளுக்கு எழுதிக்கொடுத்த சொத்தை பொறுத்து போலி பத்திரம் எழுதப்பட்டுள்ளது அதை ரத்து செய்ய கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எனது மகளுக்கு எழுதிக்கொடுத்த சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது குடும்ப சொத்தாகும், வாய்மொழி பாகப்படி கிடைத்தது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் அந்த சொத்து எனது குடும்ப சொத்து என்று கூறுகிறேன் என்றால் எனது அப்பாவின் பூர்விக சொத்தாகும்.

2. எனது அப்பாவின் பெயர் என்ன என்றால் சிதம்பரதங்க நாடார் ஆகும். எனது அப்பாவிற்கு எத்தனை குழந்தைகள் உள்ளது என்றால் 4 பெண், 3 ஆண்கள். எனது அப்பா எந்த வருடத்தில் இறந்தார் என்றால் நினைவில்லை. எனது அம்மாவின் பெயர் அன்னலட்சுமி என்றால் சரிதான். எனது சகோதரர்களின் பெயர் என்ன என்றால் சிவதாணுலிங்கம், சுயம்புலிங்கம் ஆகும். எந்த வருடத்தில் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் நினைவில்லை. எனது அப்பா இறந்த பின்பு வாய்மொழி பாகம் செய்துக்கொண்டோமா என்றால் அவர் உயிருடன் இருக்கும்போதே செய்துக்கொண்டோம்.

3. 1985 ஆம் வருடம் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்றால் நினைவில்லை. அவ்வாறு எந்த வாய்மொழி பாகமும் ஏற்படவில்லை என்றால் அதனால் தான் எனக்கு அது நினைவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு பாகப்படி எவ்வளவு சொத்து கிடைத்தது என்றால் 5 ஏக்கர் கிடைத்தது. எனது அப்பாவிற்கு 1971 ஆம் வருடம் பாக பத்திரத்தின் அடிப்படையில் சொத்து கிடைத்தது என்றால் சரிதான். அந்த பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1971 ஆம் வருடம் பாகபத்திரத்தை நான் படித்துபார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

4. 1995 ஆம் வருடம் எனது அம்மா அன்னலட்சுமி ஒரு உயில்

எழுதிவைத்துள்ளார் என்றால் அது பற்றி தற்போது தான் தெரிந்துக்கொண்டேன். 2 ஆம் பிரதிவாதி தனது எதிருரையில் மேறப்டி உயில் மூலம் சொத்து கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் தெரியும். மேற்படி உயில் பற்றி தெரிந்தபின்பும் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் நான் வழக்கு தாக்கல் செய்ததால் அதை பற்றி கண்டுக்கொள்ளவில்லை.

5. எனக்கு வாய்மொழி பாகம் கிடைத்தபின்பு தாவா சொத்தை பொறுத்து எனது பெயரில் பட்டா மற்றும் தீர்வை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. பட்டா மற்றும் தீர்வை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2008 ஆம் ஆண்டு வரை தாவா சொத்து எனது தந்தையான சிதம்பரதங்கநாடார் என்பவரின் பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான், நான் தான் அனுபவித்து வந்தேன்.

6. வாய்மொழி பாகமாக எனக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் 1 ஏக்கர் 65 செண்ட் ஒதுக்கப்பட்டது. அதன் சர்வே எண் என்ன என்றால் நினைவில்லை. எனது சகோதரர்களுக்கும் தலா 1 ஏக்கர் 65 செண்ட் ஒதுக்கப்பட்டதுள்ளது என்றால் சரிதான். வாய்மொழி பாகப்படி எனது அம்மாவிற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் எனது அம்மாவிற்கு சொத்து ஒதுக்கப்படவில்லை அவருக்கு வேறு சொத்து உள்ளது. நான் குறிப்பிடுவதுபோல் எனது அப்பாவிற்கு 5 ஏக்கர் சொத்து பாத்தியப்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. தாவா சொத்து 2 ஆம் பிரதிவாதி எனது சகோதரரிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான், அது போலி பத்திரமாகும் அதற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரர்ருக்கு எனது அம்மா உயில் எண். 61/1995 மூலம் சொத்தை பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**